CCE-III-RR/PR/PF/NSR/NSPR(A)/111/7105

**A**

ಆಗಸ್ಟ್ 2024 ರ ಪರೀಕ್ಷೆ-3

**AUGUST 2024 EXAMINATION-3**

ಒಟ್ಟು ಮುದ್ರಿತ ಪುಟಗಳ ಸಂಖ್ಯೆ : 12 ]
Total No. of Printed Pages : 12 ]

ಒಟ್ಟು ಪ್ರಶ್ನೆಗಳ ಸಂಖ್ಯೆ : 45 ]
Total No. of Questions : 45 ]

**ಸಂಕೇತ ಸಂಖ್ಯೆ : 10-T**
**Code No. : 10-T**

**CCE RR/PR/PF/ NSR/NSPR FULL SYLLABUS**

Question Paper Serial No.

# ವಿಷಯ : ಪ್ರಥಮ ಭಾಷೆ — ತಮಿಳು

# Subject : First Language — TAMIL

**(ಶಾಲಾ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಪುನರಾವರ್ತಿತ ಅಭ್ಯರ್ಥಿ / ಖಾಸಗಿ ಅಭ್ಯರ್ಥಿ / ಎನ್.ಎಸ್.ಆರ್. / ಎನ್.ಎಸ್.ಪಿ.ಆರ್.)**

**(Regular Repeater / Private Repeater / Private Fresh / NSR / NSPR)**

ದಿನಾಂಕ : 02. 08. 2024 ] [ Date : 02. 08. 2024

ಸಮಯ : ಬೆಳಗ್ಗೆ 10-15 ರಿಂದ ಮಧ್ಯಾಹ್ನ 1-30 ರವರೆಗೆ ] [ Time : 10-15 A.M. to 1-30 P.M.

ಗರಿಷ್ಠ ಅಂಕಗಳು : 100 ] [ Max. Marks : 100

**Cut here/ಇಲ್ಲಿ ಕತ್ತರಿಸಿ**

**பொதுவான குறிப்புகள் :**

1. இந்த வினாத்தாள் வினாக்கள் 45-ஐ கொண்டுள்ளது.
2. இந்த வினாத்தாள் பின்புறமாக மூடி வைக்கப்பட்டுள்ளது ( Sealed by reverse jacket) நீங்கள் தேர்வு ஆரம்பிக்கும் பொழுது **வலக்கைப் பக்க ஓரத்தை பிரித்து திறக்க வேண்டும் (அம்புகுறியிட்டு காட்டியுள்ளபடி). இடது பக்க ஓரத்தை பிரிக்கக்கூடாது.** வினாக்களை உள்ளடக்கிய அனைத்துப் பக்கங்களும் சரியாகவும் பிரிக்கப்படாமலும் உள்ளதா என சரிபார்க்கவும்.
3. வினாக்களில் கொடுக்கப்பட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றவும்.
4. வலதுகைப் பக்கத்தில் கொடுக்கப்பட்டுள்ள எண்கள் அதிகபட்ச மதிப்பெண்ணைக் குறிக்கிறது.
5. மாணவர்கள் வினாத்தாளைப் படிப்பதற்கென கூடுதலாக 15 நிமிடங்கள் தரப்பட்டுள்ளன.
6. மாணவர்கள் தங்கள் தேர்வு அனுமதிச்சீட்டில் (Admission Ticket) உள்ள குறியீடும், வினாத்தாளின் குறியீடும் ஒரே மாதிரியாக உள்ளதா என்பதை சரிபார்க்கவும்.

இங்கிருந்து பிரிக்கவும்

**TEAR HERE TO OPEN THE QUESTION PAPER**
இங்கு ஒட்டியுள்ள பகுதியைப் பிரித்துத் திறக்கவும்

**02. 08. 2024**

**Tear here**

**I.** **கொடுக்கப்பட்டுள்ள நான்கு விடைகளுள் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து குறியீட்டுடன் எழுதுக :** **6 × 1 = 6**

1. அறத்தினூஉங் காக்கமும் இல்லை - அறத்தினூஉங் என்பது

    (A) செய்யுளிசை அளபெடை

    (B) சொல்லிசை அளபெடை

    (C) உயிரளபெடை

    (D) ஒற்றளபெடை

2. கந்தன் பாடம் படித்தான். கந்தன் என்பது

    (A) பெயர்ச்சொல் (B) வினைச்சொல்

    (C) இடைச்சொல் (D) உரிச்சொல்

3. பைந்தமிழ்

    (A) வினைத்தொகை

    (B) பண்புத்தொகை

    (C) உம்மைத் தொகை

    (D) உவமைத் தொகை

4. ஆற்று நீர் சலசல என்று ஓடியது. இத்தொடரில் சலசல என்பது

(A) அடுக்குத்தொடர்

(B) வினையெச்சம்

(C) வினைமுற்று

(D) இரட்டைக்கிளவி

5. ஐந்து சீர்களைக் கொண்டது

(A) குறளடி

(B) நெடிலடி

(C) கழிநெடிலடி

(D) சிந்தடி

6. வெற்றி பெற்ற வீரனின் நற்பண்புகளைப் பாடுவது

(A) வெட்சி

(B) கரந்தை

(C) பாடாண்

(D) வஞ்சி

**II. முன்னுள்ளதைப் போன்று பின்னுள்ளதை ஏற்ற சொல்லால் நிரப்புக : 4 × 1 = 4**

7. திருவள்ளுவர் திருக்குறளை இயற்றினாரா ? வினா வாக்கியம்;

   ஆஹா ! என்னே இந்த மலையின் அழகு ! : .......................... .

8. பாடம் படித்தேன் - இறந்த காலம்;

   நாளை வருவேன் : .......................... .

9. களபம் என்பதன் பொருள் சந்தனம்;

   பரி என்பதன் பொருள் : .......................... .

10. தாமரை சூடினாள் பொருளாகு பெயர்;

    வற்றல் உண்டான் : .......................... .

**III. ஒரு தொடரில் விடை தருக : 7 × 1 = 7**

11. நீ எத்தகைய எண்ணத்தைக் கூடு என்கிறார் நாமக்கல் கவிஞர் ?

12. யாரைக் கண்டதும் நிலம் என்னும் நல்லாள் நகுவாள் ?

13. சீதை அனுமனிடம் கொடுத்தனுப்பிய அணிகலன் யாது ?

14. திரு.வி.க. சொற்பொழிவை எவ்வாறு நிகழ்த்துவார் ?

15. இளம்பெருவழுதி பாகுபாடு செய்த மனிதர்களின் இருவகையினர் யாவர் ?

16. மலேசியாவின் தலைநகரம் எது ?

17. பம்பன் இயற்றிய நூல்கள் யாவை ?

**IV. மூன்று அல்லது நான்கு தொடர்களில் விடை தருக : 10 × 2 = 20**

18. மகன் தந்தைக்குச் செய்யும் உதவி யாது ?

19. இளையான்குடி மாறர் விருந்தனராகிய தபோதனரை வரவேற்று உபசரித்தமையைக் குறிப்பிடுக.

20. சங்கத் தலைவி என்ன சமைத்தாள் ?

21. பெண்கள் பாரினில் எதனை நடத்த வந்தனர் என்று பாரதியார் குறிப்பிடுகிறார் ?

22. நீதிச்சாரம் என்ற நூல் பற்றி எழுதுக.

23. இளைஞன் தன்னை எதைப் போன்று வழி நடத்திக் கொள்ள வேண்டும் என்று வைரமுத்து கூறுகிறார் ?

24. சிந்தனைக்கு விருந்தாகும் விடுகதை ஒன்றினை விளக்குக.

25. அடுக்குத்தொடர் என்றால் என்ன ? சான்று தருக.

26. செய்யுளில் எதுகை, மோனை என்பதை விளக்குக.

27. அடி என்றால் என்ன ? அதன் வகைகள் யாவை ?

**V. ஐந்து அல்லது ஆறு தொடர்களில் விடை தருக : 4 × 3 = 12**

28. இலங்கையில் சீதை இருந்த நிலைபற்றி அனுமன் கூறியவற்றை எழுதுக.

29. இயல்பு கவிதையின் பொருட்சிறப்பில் மூன்றினை எழுதுக.

30. கிராமத்து பெண் குழந்தைத் தொழிலாளர் பற்றி கி.ராஜநாராயணன் என்ன கூறுகிறார் ?

31. தமிழ் நாட்டரசர்களைப் பழித்த ஆரிய மன்னர்களுக்கு எதிராகச் செங்குட்டுவன் உரைத்த சூளுரையினைக் கூறுக.

**VI. குறிப்பு வரைக :** **2 × 3 = 6**

32. புரட்சிக்கவி பாரதியார்

33. பழமொழி நானூறு

**VII. கீழ் வரும் அணியைச் சான்றுடன் விளக்குக :** **1 × 3 = 3**

34. வேற்றுமை அணி

**VIII. இடம் சுட்டிப் பொருள் விளக்குக :** **3 × 3 = 9**

35. ''ஈன்று புறந்தருதலென் றலைக் கடனே''

36. ''எம் தமிழ் பாவையைச் சுமந்து செல்லுங்கள்''.

37. ''இவர் என் தலையாய நண்பர்களுள் ஒருவர்''.

**IX.** கீழ் வரும் பழமொழியை விளக்குக : **1 × 3 = 3**

38. ''இறைக்க இறைக்க ஊறும் கிணறு''.

*அல்லது*

''தாயைப் போல பிள்ளை; நூலைப் போல சேலை''.

**X.** அடிபிறழாமல் எழுதுக : **1 × 4 = 4**

39. ''சோதியாய்த் தோன்றும் .....'' எனத் தொடங்கும் 'திருவாசகப்' பாடலை எழுதுக.

*அல்லது*

''ஏட்டையும் பெண்கள் ..... '' தலைகவிழ்ந்தார் என்னும் கும்மி பாடல்''.

**XI.** எட்டு அல்லது பத்து தொடர்களில் விடை தருக : **2 × 4 = 8**

40. வள்ளுவர் அறத்தை வலியுறுத்துவதை விளக்கி வரைக.

41. இலங்காவியின் கீழுலக விந்தைகளை விவரி.

*அல்லது*

தமிழ் இதழ்களும் விடுகதைகளும் குறித்து பேராசிரியர் ச.வே. சுப்பிரமணியம் கூறுவன யாவை ?

**XII. கீழ்வருவனவற்றை விளக்கி எழுதுக :** **1 × 4 = 4**

42. ''விசும்பின் துளிவீழின் அல்லால்மற் றாங்கே

பசும்புல் தலைகாண் பரிது.

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது

அன்றே மறப்பது நன்று.

சொல்லுதல் யார்க்கும் எளிய அரியவாம்

சொல்லிய வண்ணம் செயல்''.

*அல்லது*

''பொல்லாத சொல்லி மறைந்தொழுகும் பேதைதன்

சொல்லாலே தன்னைத் துயர்படுக்கும் - நல்லாய்

மணலுள் முழுகி மறைந்து கிடக்கும்

நுணலும் தன் வாயால் கெடும்''.

**XIII.** பின்வரும் பகுதியைப் படித்து கொடுத்துள்ள வினாக்களுக்கு விடை தருக :

**(2 × 2 = 4) 1 × 4 = 4**

43. கிராமங்களே நமது உயிர் நாடி அவர்கள் தம் வாழ்க்கை அனுபவங்களை கற்பனை வளத்துடன் கலை வடிவில் வெளிப்படுத்தினர். நாடோடிக் கதைகள், நாட்டுப்புறக் கூத்து, பாட்டு, பழமொழிகள், விடுகதைகள் யாவும் நாட்டுப்புறக் கலைகள்.

பாகவதமேள : பாடலும் ஆடலும் இணைந்த கூத்தினை 'பாகவதமேள' என்பர். இக்கூத்தின் தலைவன் 'பாகவதன்' என்னும் பாட்டுக்காரன் ஆவான். ஆட்டக்காரர்கள் காலில் சலங்கையும் மார்பில் மாலையும் அணிந்திருப்பர்.

**வினாக்கள் :**

a) நாட்டுப்புறக் கலைகள் யாவை ?

b) 'பாகவத மேள' ஆட்டம் குறித்து எழுதுக.

**XIV.** மடல் எழுதுக : **1 × 5 = 5**

44. விளையாட்டுப் போட்டியில் முதலிடம் வென்ற நண்பனைப் பாராட்டி கடிதம் எழுதுக.

*அல்லது*

உனக்கு தேவையான தமிழ் நூல்களை உன் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வைதேகி பதிப்பகத்திற்கு கடிதம் எழுதுக.

**XV. கொடுக்கப்பட்டுள்ள தலைப்புகளுக்கு ஏற்றவாறு இருபது வரிகளுக்கு குறையாமல் கட்டுரை எழுதுக:** **1 × 5 = 5**

45. ''சந்திராயன்-3 குறித்து நீ அறிந்த செய்திகளை எழுதுக.''

*அல்லது*

''இயற்கையைப் பாதுகாப்பதில் நமது பங்கு குறித்து எழுதுக.''

DO NOT WRITE ANYTHING HERE